வன்முறை செயலுக்கு ஆளாகிய அனைவரும், சுவிஸ் சட்டப்படி பாதிக்கப்பட்டவருக்குரிய LAVI நிலையத்தின் உதவியை நாடலாம். பாதிக்கப்பட்டவர் என்னும் போது, உடல்ரீதியாக, பாலியல்ரீதியாக, மனரீதியாக, **நேரடித்தாக்குதலுக்கு** உட்பட்டவர்களை குறிக்கின்றது. தாக்குதல் நடத்தியநபரைக் கண்டுபிடித்தாலும் இல்லாவிட்டாலும் மற்றும் அந்நபரின் செயல் தண்டிக்கப்படக்கூடியதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் இச்சேவையை நாடலாம்.

பாதிக்கப்பட்ட நபரின் கணவர், பிள்ளைகள், தாய், தந்தை மற்றும் உறவினர் ஆகியோர் இச்சட்டப்படி **மறைமுகமாக பாதிக்கப்பட்டவர்** எனக்கருதப்படுகின்றனர். அவர்களும் இந்நிலையத்தினால் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இச்சட்டப்படி பாதிக்கப்பட்ட நபர் சட்ட நடவடிக்கைக்கு முன்னால் அங்கீகரிக்கப் படுகின்றார். **LAVI நிலையத்தின் உதவியைப் பெறுவதற்கு சட்ட முறைப்பாடு செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.**

**கவனத்தில் கொள்ளவும்:**

பாதிக்கப்பட்டவரின் ஒவ்வொரு விதமான உரிமைகளும் குறிக்கப்பட்ட கால அவகாசம் உடையது. என்ன குற்றம் என்பதைப் பொறுத்து, உதாரணமாக, சட்டமுறைப்பாடு செய்வதற்கு 3 மாதம், அல்லது கூடிய மாத அவகாசம் கொடுக்கப்படும்.

சில சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவருக்கு (நபரை அடையாளம் காண முடியாத பட்சத்தில் அல்லது நபர் தலைமறைவாகினாலும்,…) குற்றம் நடந்த இடத்திற்கு உரிய கந்தோனின் மூலம் நட்டஈடு அல்லது வேறு வழிகளில் ஈடு செய்வதற்கு LAVI வசதி செய்து கொடுக்கின்றது (மனஉழைச்சல்: LAVI சட்டப்படிபகுதி 19, 22). குற்றஈடு செய்வதற்கான கோரிக்கை 5 வருடத் தவணைக்குள் முறைப்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

கடைசி சம்பவம் நடைபெற்ற நாளிலிருந்து விதிவிலக்காக சில சந்தர்ப்பங்களில் கால அவகாசம் மாற்றமடையும் (LAVI சட்டப்படிபகுதி 25).

இக்கால அவகாசம் நிறைவடைந்து விட்டால் உங்கள் கோரிக்கை நிறைவேறுவது சாத்தியப்பட மாட்டாது.

**18வயதுக்கு குறைந்த பாதிக்கப்பட்ட நபருக்கு அவரது 25 வயது வரை கால அவகாசம் உண்டு.**

**சட்ட நடவடிக்கை எடுத்ததும் பாதிக்கப்பட்டவர் தன் உரிமைகளை முன்வைக்கலாம்:**

- அதிகாரிகளிடம் (பொலிஸ் மற்றும் சட்டத்தரணி போன்றவர்களிடம்) தனது விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை தன் அனுமதியின்றி பிறருக்கு கொடுக்க வேண்டாம் எனக் கூறுதல். (சட்டப்பகுதி 152, பிரிவு 1,3)
- பாதிப்பை ஏற்படுத்திய நபரை நேருக்கு நேர் சந்திப்பதைத் தவிர்த்தல் (சட்டப்பகுதி 152, பிரிவு 3). பாலியல்ரீதியான குற்றங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியவரை தனது அனுமதியின்றி நேர்கொள்வதைத் தவிர்த்தல் (சட்டப்பகுதி 153, பிரிவு 2).
- பாலியல்ரீதியான பாதிப்பின் போது ஏற்பட்ட மனத்தாக்கத்தை கூறுவதற்கு ஒரே பால் இன (அதாவது ஆணாயின் ஆணும், பெண்ணாயின் பெண்ணும்) நபரைக் கேட்டல். இக்கோரிக்கையை LAVI நிலையத்திலோ காவல்துறையிடமோ சட்டநிபுணரிடமோ முன்வைக்கலாம் (சட்டப்பகுதி 153, பிரிவு 1)
- காவல்துறையிடம் அல்லது சட்ட நிபுணர்களிடம் செல்லும் போது தமது நம்பிக்கைக்குரிய ஒருவருடனும் இணைந்து செல்லலாம், அந்நபர் LAVIஇல் உள்ள ஒருவராகவும் இருக்கலாம் (சட்டப்பகுதி 152, பிரிவு 2).

**பாதிக்கப்பட்டவருக்கு பின்வரும் உரிமைகளும் வாய்ப்புகளும் உள்ளன:**

- தனது கந்தோனில் உள்ள எந்த LAVI நிலையத்திலும் தகவல்களைப ் பெறுவதற்கோ, ஆற்றுப்படுத்துதலுக்கோ, ஓர்ஆதரவுக்கோ, தேவைப்பட்டால் பண உதவிக்கோ செல்லலாம்.
- சுரியான முறையில் முடிவு எடுப்பதற்கும் மேல்முறையீடு செய்வதற்கும் தக்கதகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- சட்ட நடவடிக்கையின் போது பாதிப்புக்குரிய பல்வேறு நட்டஈடு எதிர்பாப்புகளை முன்வைக்கலாம் (சட்டப்பகுதி 122–126 வரை).
- சட்டநிபுணர் மூலம் சட்டத்தரணி ஒருவரை தெரிவுசெய்தல். இந்த நடவடிக்கைக்கு கந்தோன் பணரீதியாக ஏற்பாடு செய்கின்றது. அதை பாதிக்கப்பட்டவர் திரும்ப செலுத்தத் தேவை ஏற்படாது (சட்டப்பகுதி 136)
- …

## **LAVI நிலையம் உங்களுக்கு என்ன அளிக்கின்றது?**

ஆதரவு – சட்டநடவடிக்கையின் தகவல்கள் – மேற்கொண்டு செய்யவேண்டிய ஒழுங்குகளுக்கு பக்கத் துணை–தேவைஏற்படின் பொருள் உதவி – பிரச்சனையை தீர்ப்பதற்குரிய நிபுணர்களிடம் வழிகாட்டுதல்.

LAVI நிலையத்தில் வேலை செய்வோர் அனைவரும் **தொழில் இரகசியத்தைப் பேணுவர்.**

LAVI நிலையத்தின் ஆலோசனைகள் **இலவசமாக** வழங்கப்படும்.

**எத்தன்மையான குற்றங்கள்?**

- கொலைகள்
- கடுமையான செயல், அடி மற்றும் காயங்கள்
- பிறரால் ஏற்பட்ட வீதிவிபத்து
- வீட்டில் மற்றும் தம்பதிகளுக்குள் நடைபெறும் வன்முறை
- பாலியல் வன்முறை
- கற்பழிப்பு, பாலியல் வற்புறுத்தல், தம்பதிகளுக்குள் நடைபெறும் கற்பழிப்பு
- சிறுவர்களின் கற்பழிப்பு, குடும்ப உறுப்பினர்களுக்குள் நடைபெறும் பாலியல் குற்றங்கள்.

மற்றும்:

- அச்சுறுத்தல்
- கடத்தல் மற்றும் பலவந்தமாக மறைத்து வைத்திருத்தல், வேறுகுற்றங்கள் (கொலை, கொள்ளை, கற்பழிப்பு)
- மருத்துவரீதியான தவறுகள், …

**எங்களை தொடர்புகொள்ள தயங்க வேண்டாம்.**

**பாதிக்கப்பட்ட நபர் மற்றும்/ அல்லது அவரைச் சார்ந்தவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க பதில் அளிப்போம்.**